# OS.No.28/2024, Dated 03.06.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 03rd day of June 2026.

**வா.சா.1 – பன்னீர் செல்வம் த/பெ சின்னப்ப கவுண்டர் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

சர்வே எண்.22/பி2ஏ, 13/5பி2, 13/பி/1ஏ ஆகிய மூன்று அயிட்ட சொத்துகள் பிரதிவாதிகளின் அனுபவத்திலும் உரிமையிலும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கணினி பட்டாவில் மட்டும் தான் கிராம நிர்வாக அலுவலரின் உதவியுடன் தவறாக மாற்றம் செய்துள்ளேன் என்றாலும் இதர ஆவணங்களில் பிரதிவாதிகளின் பெயர்களே உள்ளது என்றால் சரியல்ல. கணினி பட்டாவிலும் 13/5பி2 என்பது 3.5 ஏர்ஸ் பிரதிவாதிகளின் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கும் எனக்கும் விற்றது போக மீதம் உள்ள சொத்துகள் தான் மேற்சொன்ன சொத்துகள் என்றால் எனக்கு அது தெரியாது. ஆனால் அவை எனது அனுபவத்தில் உள்ளது. எனக்கும் எனது தகப்பனாருக்கும் விற்ற சொத்துகள் போக மேற்சொன்ன சொத்துகளை 2ம் பிரதிவாதிக்கு இதர பிரதிவாதிகளும் மற்ற நபர்களும் விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான் ஆனால் அது தவறான பத்திரம். அந்த விற்பணை ஆவணம் படி 2ம் பிரதிவாதி தான் அந்த சொத்துகளை இன்று வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு விற்றது போக மீத சொத்துகள் தாவா சொத்துகள் என்றாலும் அவை எனக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துகளை எனக்கு பிரதிவாதிகள் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் எழுதிக்கொடுத்துள்ளார்கள். அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கிலும் அவ்வாறு தான் சொல்லியுள்ளேன். 2ம் பிரதிவாதிக்கு உரிமையும் அனுபவமும் ஆன வழக்கு சொத்துகளில் நான் எவ்வித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு அவரது சகோதரர்கள் எழுதிக்கொடுத்த பத்திரம் சட்டப்படியானது என்றாலும் அது செல்லாது என்று நான் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. நாங்கள் கிரையம் வாங்கி சுமார் 35 வருடங்கள் இருக்கும். வழக்கு சொத்துக்களுக்கான என் பெயரிலோ அல்லது எனது தகப்பனார் பெயரிலோ உள்ள சிட்டா, அடங்கல், அ பதிவேடு ஆகியவற்றை என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் நான் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். 01.05.1969 தேதியிட்ட வலசை கவுண்டர் கம்ச கவுண்டர் இடையிலான பாகப்பிரிவினை பத்திரத்தில் கூட சொத்து விபரங்கள் தெளிவாக காட்டப்படவில்லை என்றால் அது குறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. 27.08.1987 தேதியிட்ட எனது தந்தை சின்னப்ப கவுண்டர் கம்ச கவுண்டரிடம் வாங்கிய விற்பணை

ஆவணத்திலும் சொத்து விபரங்கள் தெளிவாக இல்லை என்றால் சரியல்ல. 27.07.1992 ஆம் தேதியன்று பிரதிவாதிகள் எனது தகப்பனாருக்கு எழுதி கொடுத்த விற்பணை ஆவணத்திலும் சொத்து விபரங்கள் தெளிவாக இல்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனது தகப்பனாருக்கு 03.12.1993 அன்று எழுதிக்கொடுத்த விற்பணை ஆவணத்தில் அளவு தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பூமியில் உள்ள அளவுகளையும் வருவாய்துறை ஆவணங்களில் உள்ள அளவுகளையும் சரிபார்க்காமல் கூடுதலாகவும் குறைவாகவும் குறிப்பிட்டு எழுதிவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்ன 3 பத்திரங்களில் சில சொத்துகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த 3 பத்திரங்களில் குறிப்பிடப்படாத சொத்துளை தான் 2ம் பிரதிவாதிக்கு இதர பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த சொத்துகள் எனது தகப்பனார் வாங்கிய சொத்துகள் என்று தான் குறிப்பிட்டுள்ளேன். எனது தகப்பனார் வாங்கிய சொத்துகள் குறித்து அவரது இதர வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ரவி, சேகர் மற்றும் பாலாஜி ஆகியோருக்கு ஒரு சகோதரி உள்ளார் என்றாலும் அவரும் 2ம் பிரதிவாதிக்கு ஒரு சொத்தை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன சகோதரியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் அவர் கொடுத்த சொத்தையும் குறிப்பிடவில்லை என்றால் தரப்பினராக சேர்க்கவில்லை ஆனால் சொத்து குறித்து குறிப்பிட்டுள்ளேன். இவ்வழக்கு உரிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் மற்றும் இதர நபர்கள் பெயரில் இதே வழக்கு சொத்து குறித்து வந்தவாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.124/2010 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் சேகர் பெயரில் 05.07.2010 தேதியிட்ட விற்பணை ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை கேட்டும் எனது அனுபவத்தை தடை செய்யக்கூடாது என்று கோரியும் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் எனக்கு அந்த விபரங்கள் தெரியாது. இந்த வழக்கில் வழக்கு சொத்து எனக்கு உரிமையானது என்று நான் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன அ.வ.எண்.124/2010 வழக்கு இரு தரப்பிலும் முழுமையாக விசாரணை செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் விடுபட்டு போன விளம்புகை பரிகாரத்தை 15 வருடங்கள் கழித்து இவ்வழக்கில் கோருவது காலவரையரையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. மேற்சொன்ன அ.வ.எண்.124/2010

வழக்கிலேயே 05.07.2010 தேதியிட்ட விற்பனை ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று உரிமையியல் நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது என்றால் அந்த விபரங்கள் எனக்கு தெரியாது. மேற்சொன்ன வழக்கின் விபரங்களை இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் ஏற்கனவே உரிமையியல் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது மறுபடியும் பரிகாரங்களை இவ்வழக்கில் கோரமுடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு சட்ட விரோதமானது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2026.06.03 18:37:02 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி